உ
சிவமயம்

# அண்ணாநகர் நகரத்தார் சங்கம்

C/o. Vinza CADD Complex, W-97, 3rd Main Road,
Opp. Towers Club, Anna Nagar, Chennai – 600 040,
Email- nans@nagaratharans.com, Website: www.nagaratharans.com

தேதி : 27.11.2009

அன்புடையீர்,

## சங்காபிஷேகம்

நாளது விரோதி வருடம் கார்த்திகை மாதம் 21ம் தேதி (07.12.2009) திங்கட்கிழமை மாலை 3 மணி அளவில் 15வது மெயின் ரோடு, ரங்கநாதன் கார்டன், அண்ணா நகர் மேற்கில் அமைந்துள்ள சந்திரமௌளீஸ்வரர் கோவிலில் நமது சங்கத்தின் சார்பாக சங்காபிஷேகம் நடைபெற உள்ளது. அனைவரும் வந்து கலந்து கொண்டு இறையருள் பெற வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

அன்புடன்
நிர்வாகக் குழு

குறிப்பு : நம் சங்கத்தின் சார்பாக 2009 டிசம்பர் 25 ம் நாள் மருத்துவ முகாம் ஒன்று நடத்த உத்தேசித்திருப்பதால் டிசம்பர் 13 ம் நாள் மருத்துவ ஆலோசனை முகாம் ரத்து செய்யப்பட்டுள்ளது. வழக்கம் போல் ஜனவரி மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையன்று மருத்துவ ஆலோசனை முகாம் நடைபெறும்.

(PTO)

உ
சிவமயம்

காடுவெட்டிப் போட்டு கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேளாண்வணிகர் வீடுகட்டு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்காதிரு.

# அண்ணாநகர் நகரத்தார் சங்கம்

C/o. Vinza CADD Complex, W-97, 3rd Main Road,
Opp. Towers Club, Anna Nagar, Chennai – 600 040,
Email- nans@nagaratharans.com, Website: www.nagaratharans.com



## பிள்ளையார் நோன்பு விழா

நாள் : 22.12.2009 செவ்வாய்க்கிழமை
இடம் : கைலாஷ் ஸ்ரீமஹால்
3வது அவென்யூ, (நியூ ஆவடி ரோடு சந்திப்பு அருகில்)
அண்ணாநகர், சென்னை - 600 040.
போன் : 26214546 / 26267777

தேதி : 27.11.2009

அன்புடையீர், வணக்கம்,

**இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்** !

பிள்ளையார் நோன்புநாளில்
நகரத்தார் நாமெல்லாம்
ஒன்றுசேர்ந்து இழையெடுக்க
மகிழ்வுடனே அழைக்கின்றோம்.

சொக்கநாதர் பெற்றபிள்ளை
பேர்சொல்லிப் போற்றிடவே
சொந்தங்கள் அழைத்துவந்து
சிறப்புற வேண்டுகிறோம்.

நகரத்தார் பெருமக்கள் அனைவரும் பங்கு பெற்று இறையருள் பெரும் வகையில் அண்ணாநகர் நகரத்தார் சங்கத்தின் சார்பாக **பிள்ளையார் நோன்பு விழா** விரோதி வருடம் மார்கழி மாதம் 7 ம் நாள் 22.12.2009 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி அளவில் சென்னை, **அண்ணாநகர், மூன்றாவது அவென்யூ, கைலாஷ் ஸ்ரீமஹால் மண்டபத்தில்** நடைபெறவிருக்கிறது. கூட்டு வழிபாடு, சிறப்பு தீபாராதனையைத் தொடர்ந்து இழை எடுத்துக் கொண்டு இறையருள் பெறுவதற்கும், இரவு விருந்திற்கும் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது. தாங்களும் குடும்பத்துடன் கலந்துகொண்டு இறையருள் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தங்களன்புள்ள,
நிர்வாகக்குழு

குறிப்பு : உறுப்பினர் முகவரி மாற்றம் இருந்தால் விழாவின் போது வரவேற்பு இடத்தில் எழுதி கொடுக்கவும்.

(PTO)